# <u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி</u>

அ.வ.எண். 81/2025 வா.சா. 2. சுந்தரராஜ்

2026 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 24 ம் தேதியில் வாதி தரப்பு சாட்சியாகிய, வா.சா.2 ஆன சுந்தரராஜ் என்பவரின் வாக்குமூலம் (1969 ஆண்டு 44 வது விதியின்படி) திருமதி. R. சுஜாதா., B.Sc., L.L.M., முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி அவர்களால் ஆணையிட்டு உறுதியளிக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | – | சுந்தரராஜ் | தொழில் | – | |
| த/பெ க/பெ | – | ஞானமுத்து | ஜாதி | – | |
| கிராமம் | – | சூளேஸ்வரன்பட்டி | வயது | – | 70 |
| தாலூக்கா | – | பொள்ளாச்சி | தேதி | – | 24.02.2026 |

முதல் விசாரணை

நான் சூளேஸ்வரன்பட்டியில் குடியிருக்கிறேன். நான் தாக்கல் செய்துள்ள சாட்சிய நிரூபண வாக்குமூலத்திலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அதிலுள்ள சங்கதிகள் எனக்கு தெரியும்.

| Sl.No. | Date | Exhibits Marked | Description | Remarks |
|---|---|---|---|---|
| 1 | | **வா.சா.ஆ.8** | வா சா 2 எனது ஆதார் அட்டை | அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது |

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) எதற்காக இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் முத்துசாமிக்கு வாரிசு சான்றிதழ் கேட்டு வழக்குதாக்கல் செய்துள்ளார்கள். வாதி சுமதி அழைத்ததின் பேரில் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். எனக்கும் வாதிக்கும் என்ன உறவு என்றால் எனது அண்ணன் மகள் ஆவார்.

ஒப்பம்/–(R. சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி

சுமதியின் அம்மா பெயர் என்ன என்றால் கண்ணம்மாள் ஆவார். எனது பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள குமாரசாமி என்பவரின் மனைவி பெயர் என்ன என்றால் பேச்சியம்மாள் என்கிற பாப்பம்மாள் ஆகும். பாப்பம்மாள் தற்போது என்ன செய்து கொண்டிருக்கிறார் என்றால் அவர் இறந்துவிட்டார். குமாரசாமி, பாப்பம்மாளுக்கு கண்ணம்மாள் , முத்துசாமி தவிர வேறு வாரிசுகள் யாராவது உள்ளார்களா என்றால் இல்லை,

2) முத்துசாமி மனைவி சரஸ்வதியும் காலமாகிவிட்டார் என்றால் சரிதான். முத்துசாமிக்கும், சரஸ்வதிக்கும் எத்தனை குழந்தைகள் என்றால் குழந்தைகள் கிடையாது. வழக்கின் ஆவணங்கள் அடிப்படையில் மட்டுமே முத்துசாமி, சரஸ்வதிக்கு வாரிசுகள் இல்லாத நிலையில் வாதி சுமதி மட்டுமே வாரிசு என்று பரிகாரம் கொடுக்க முடியும்ள ன்றும் எனது வாய்மொழி சாட்சியத்தின் மூலம் கொடுக்க முடியாது என்றால் சரியல்ல.

ஒப்பம்/–(R. சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி